# ஓ இதயமே நிம்மதியின் சன்னிதியில்

ஓ இதயமே நிம்மதியின் சன்னிதியில்
நிலை பெறுவாய்
ஓ இதயமே அன்பு தரும் ஆதரவில்
அமைதிகொள்வாய்
வந்த தூரம் போதும்
ஓய்வு கொள்ளும் நேரம்
தேவன் பாதம் போதும்

**1**
அமைதி கைகள் நெஞ்சமதை - வருடிவிடும்
ஆறுதலின் போர்வை உன்னை - அரவணைக்கும்
நடந்து வந்த சுவடெல்லாம்
நடந்தவைதான் -இனி
தொடர்வதெல்லாம் தெரியாத
நிலவரம் தான்
தாகம் தீர்த்த நேரம்…
தேவையென்ன ஈரம் .. தேவன் பாதம் போதும்

**2**
ஆசைகளும் தேவைகளும் ஆயிரம்தான்
சாதனைகள் வேதனைகள் வருபவைதான்
பரபரக்கும் வாழ்வின் பொருள் புரியவில்லை
பணம் புகழால் நிம்மதியும் வருவதில்லை - வெறும்
கவலை இனி வேண்டாம்
கனவுகளும் வேண்டாம்
தேவன் பாதம் போதும்